# வரதராஜனின் விநோத வழுக்கை

*By **Mr. Crazy Mohan***

கொடிது! கொடிது! என வறுமையை வர்ணிக்க ஆரம்பித்த அவ்வையார் ஒரு வேளை நமது கதாநாயகன் வரதராஜனைப் பார்க்கும் பட்சத்தில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, “கொடிது! கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது வரதராஜனின் வாலிப வழுக்கை” என்று அவசர அவசரமாகப் பாடி முடித்திருதுப்பாள்.

இத்தனைக்கும் பாவம், வரதராஜனுக்கு இளமை ஊஞ்சலாட வேண்டிய இருபத்தெட்டு வயது தான் ஆகிறது. இருபத்தைந்து வயதில் மண்டைப் பிரதேசத்தின் மையத்தில் சிறு திடலாக ஆரம்பித்த சொட்டை, ஓரிரு வருடங்களில் சிங்களத் தீவின் வடிவம் போல் வியாபித்து, இப்பொழுது இந்திய தீபகற்பகமாகப் பெருகி வழுக்கை ஸ்தானத்தை எட்டியிருக்கிறது. தவளையின் வளர்ச்சிப் பருவம் போல வரதராஜனின் வழுக்கையின் வளர்ச்சிப் பருவத்தைப் பற்றி அவனோடு நெருங்கிப் பழகுபவர்களிடம் கேட்டால் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பார்கள். இவன் பிறவியிலேயே வழுக்கை அல்ல என்றும் ஒரு காலத்தில் இவனுடைய கபாலத்தில் கிராப் இருந்தது என்றும் ஊரார் நம்புவதற்காக தெய்வமாகப் பார்த்துக் கையகலமுடிக் கொத்தை நினைவுச் சின்னமாகப் பின் மண்டையில் கூறு கட்டி வைத்திருக்கிறது.

இவ்வளவு இளம் வயதில் வரதராஜனுக்கு அதிவேகமாக வந்த இந்த விநோத வழுக்கைக்குக் காரணத்தை தலையைப் பிய்த்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித்தால் நமக்கு வழுக்கை விழுந்துவிடும். ‘முதிர்ச்சி அடைந்த அறிவுக்கு அடையாளமே வழுக்கை’ என்னும் பொதுவான கோட்பாடு தன் விஷயத்தில் பொருந்தாது என்பதை வரதராஜனைத் தனியாகச் சந்தித்து சொக்காயைப் பிடித்துக் கேட்டால் ஒப்புக்கொள்வான். “டயாபடீஸ் போல வழுக்கையும்; பரம்பரை பரம்பரையாக கைமாறும் (ஸாரி! தலை மாறும்) பிருதுராா்ஜித் சொத்து” என வாதிடுபவர்கள் வரதராஜனின் தந்தை ஆதிகேசவனைப் பார்த்தால் மௌனமாகி விடுவார்கள். ஆதிகேசவன் தினமும் காலையில் ஸ்நானம் செய்து விட்டு இயற்கையிலேயே மணத்தோடு இடுப்பு வரை நெளியும் தன்னுடைய குடுமியை அல்லது கூந்தலைக் கோதி விட்டபடி இலவசமாக கேசவர்த்தினிக்கு விளம்பரம் கொடுத்துக் கொண்டிருப்பார்.

அப்ப வரதராஜனோட தலையில் வந்த இந்த வறட்சிக்குக் காரணம் வேறு என்னவாகத்தான் இருக்க முடியும்? தலைவிதிதான். அதுவும் பொருத்தமாக தலையில் வழுக்கை ரூபத்தில் அமர்ந்து அவனது திருமணத்திற்கே தடைக்கல்லாக இருக்கிறது. இவன் பெண் பார்க்கச் சென்ற பல இடங்களில் பெண்ணைப் பெற்றவர்கள் அதீத வழுக்கையால் சற்று வயோதிகமாகத் தோற்றமளிக்கும் இவனைப் பார்த்து, “என்ன! நீங்க மட்டும் வந்துருக்கேள். உங்க பையனை அழைச்சிண்டு வரலையா”? என்று கேட்டதோடு நில்லாமல், அடுத்த பாணமாக இவனுடைய தந்தையைப் பார்த்து “இவர் யாரு, பையனோட தாத்தாவா”? என்றும் கூறி இவனை ஸ்தம்பிக்க வைப்பார்கள். பாவம், இத்தனைக்கும் வரதராஜனுக்கு ஜாதகத்துல செவ்வாய் தோஷம் கிடையாது. இவனும் ஜல தோஷன்னு ஒருநாள் படுத்தது கிடையாது. அவ்வளவு ஆரோக்கியமான தேகவாகு. அதுவும் தவிர இவனே கை நிறைய சொந்தமாக சம்பாதிச்சு ஸ்கூட்டர் வாங்கியிருக்கான், கலர் டி.வி வச்சுருக்கான், ஃப்ரிஜ் வச்சுருக்கான். என்ன பிரயோஜனம்? அல்பம், ஒரு எட்டனா சீப்பு பின் பாக்கெட்ல வச்சுக்க முடியாதபடி தலையில் வழுக்கை இருப்பதால் இவனது விவாகம் தட்டிக் கொண்டே போனது. வரதராஜனும் மனம் தளராமல் வறட்சி நிவாரணப் பணியில் ஈடுபட்டான். தலையில் தடவாத தைலம் கிடையாது. பூசாத க்ரீம் கிடையாது. ஆயுர் வேதத்தில் ஆரம்பித்து

அதர்வண வேதம் வரை (இதில் வரும் ஒரு மந்திரத்தை ஒரு மண்டலம் உச்சரித்தால் முடி வளருமாம்) ஒன்று விடாமல் எல்லாம் முயன்று பார்த்து விட்டான்.

எதேச்சையாகப் படித்த ஒரு யோகாசனப் புத்தகத்தில் கூறியபடி ரோமம் வளர்வதற்கு ஹேதுவான சுரப்பிகளை ஊக்குவிக்கும் கேசவாஸனத்தை சில நாட்கள் செய்ய முயன்று பலத்த சேதத்திற்குள்ளானான்.

கேசவாஸனத்தின் முதன் கட்டமே தலைகீழாக நிற்பதுதான். 'மொஸைக்' தரையை விட வழவழப்பான தலையை வைத்துக் கொண்டு தலைகீழாக நிற்க முயன்றதில வழுக்கை மட்டும் இருந்த தலையில் வடுக்களும் சேர்ந்து கொண்டன. இப்படி எதற்கும் பலனளிக்காமல் வானம் பார்த்த பூமியாக இருக்கும் தனது வழுக்கையால் விரக்தியடைந்து, 'பிரம்மசாரியாகவே இருந்து விடுவது' என்று முடிவெடுத்தவனுக்கு அந்த வாரம் வந்த பத்திரிகைகளில் போட்டிருந்த செய்தி மறுபடி சபலம் காட்டியது. போதாக் குறைக்கு அலுவலக நண்பன் பாலு, "டேய் வரதராஜா, சொன்னா நம்பமாட்ட. உனக்காவது பராவல்லை வழுக்கை, என் ஒன்றுவிட்ட அத்திம்பேருக்கு தலைல சுத்தமாக பொக்கை. பக்கத்து வீட்டு எருமை கிட்ட தலையைக் கொடுத்தார். அது நாலே நாலு நாள்தான் நக்கித்து. நல்ல பலன் பரவலா முடி துளிர்விட ஆரம்பிச்சுடுத்தாம்" என்று கூறி ஆசை காட்டினான்.

வரதராஜனின் பிரம்மச்சரிய விரதம் தற்காலிகமாகத் தளர்ந்து திருமண ஆசை துளிர் விட ஆரம்பித்தது.

முடி வளர்வதற்காக நாகரிக வைத்தியத்தில் ஆரம்பித்து, நாட்டு வைத்தியம் வரை பார்த்து அலுத்த வரதராஜனுக்கு இந்த மாட்டு வைத்தியம் நம்பிக்கை அளித்தது.

அன்று மாலையே வழக்கமாகப் பால் ஊற்றும் ஆனந்தக் கோனாரைச் சந்தித்து, விஷயத்தைக் கூறி, அவரது எருமை (பலனில்லா விட்டால் இருக்கவே இருக்கிறது பசு) தனது தலையில் செய்ய வேண்டிய பசுமைப் புரட்சிக்காகத் தான் தரவேண்டிய வாடகைத் தொகையையும் பேசி முடித்தான். ஒரு வாரம் ஆபீஸுக்கு லீவு போட்டு விட்டு, வீட்டில் ஆபீஸ் போவதாகக் கூறி விட்டு, ஆனந்தக் கோனார் தொழுவத்திற்குச் சென்று எருமை லட்சுமியின் முன் தலையைக் காட்டினான். தன் நாக்கால் நக்கினால் தலை வழுக்கை போகும் என்பது லடசுமிக்குத் தெரியாததால் மிரள ஆரம்பித்தது. வரதராஜன், "கோமாதா எந்தன் குலமாதா" பாடி லட்சுமியைத் தாஜா செய்து நாக்கால் தலையை வருடும் பயிற்சியையும் அதற்கு சாமார்த்தியமாக அளித்தான்.

தினமும் அரைமணி நேரம் என்ற கணக்கில் ஒரு வாரம் மாட்டு வைத்தியம் செய்து கொண்ட வரதராஜன் அலுவலக நண்பனின் ஆலோசனையின் படி ஒருமாத காலம் 'முடி வளர்கிறதா' என்று கண்ணாடியில் பார்த்தபடி காத்திருந்தான்.

ஒரு நாள் வழக்கம் போல் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்த வரதராஜன் வாசல் கதவு தட்டும் சத்தம் கேட்டு வெளியே வர, அங்கு ஆனந்தக் கோனார் லட்சுமியோடு நின்று கொண்டிருந்தார்.

ஏன் கோனார், எதுக்கு வந்திருக்கிற?

"அதான் பத்திரிகையை ஒழுங்கா படிக்கணும்கறது. அவங்க சொன்னது என்னமோ வாஸ்தவம்மான். முடி வளரும் ஆனா அது உன் தலைல இல்லை என் எருமையின் நாக்குல வளர்ந்துடுச்சு பாரு" என்று கூறி கோனார் எருமையின் தலையைத் தடவிக் கொடுக்க லட்சுமி நாக்கை வெளியே நீட்டியது. லட்சுமியின் நாக்கில் கொத்தாக ரோமம்.

*(**Mr. Crazy Mohan** - An Engineer by Qualification, An Artiste by Interest and a Humorist by Birth. He is none other than the son of Mr V Rangachari, Chief Officer (Retired), Indian Bank")*